**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி : 08.05.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

இந்தியாவின் நாகரீக வலிமை, ஒற்றுமை மற்றும் நெகிழ்ச்சியின் அடையாளமாக சோம்நாத் கோவில் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஆகாஷ்வாணியின் 90 ஆண்டுகால சிறப்பான சேவையை கொண்டாடும் விதமாக, புதுடெல்லியில் இன்று மராத்தான் ஓட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி கம்பன் கழகத்தின் 59ஆம் ஆண்டு கம்பன் விழா கம்பன் கலையரங்கில் இன்று தொடங்கியது.

புதுச்சேரியில் இரண்டாம் உலகப் போர் நிறைவு பெற்றதன் 81ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்பட்டது.

*மோடி (15)*

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களால், 1951ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட சோம்நாத் கோவிலின் 75 ஆண்டுகளை குறிக்கும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 11ஆம் தேதி குஜராத்தில் உள்ள சோம்நாத் கோவிலுக்குச் செல்கிறார். National Daily நாளிதழில் பிரதமர் எழுதியுள்ள கட்டுரையில், சில மாதங்களுக்குள் சோம்நாத் தொடர்பான 2 முக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்வது தனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு என்று கூறியுள்ளார். இந்த ஆண்டின் தொடக்கத்தில், கோயில் மீதான முதல் தாக்குதல் நடந்து ஆயிரம் ஆண்டுகளை குறிக்கும் சோம்நாத் ஸ்வாபிமான் பர்வ் நிகழ்ச்சியில், பிரதமர் பங்கேற்றார். சோம்நாத் இந்தியாவின் நாகரீக வலிமை, ஒற்றுமை மற்றும் நெகிழ்ச்சியின் அடையாளம் என்று பிரதமர் கூறினார். கோயிலின் பயணம் அழிவிலிருந்து படைப்புக்கான இயக்கத்தை பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்றும், தொடர்ச்சியான தாக்குதல்கள் மற்றும் இடர்பாடுகளுக்கு பிறகும் நம்பிக்கை மற்றும் கலாச்சாரம் எவ்வாறு உயிர்வாழ முடியும் என்பதை காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

***ஆகாஷ்வாணி -1 (6)***

நாட்டிற்கு ஆகாஷ்வாணி ஆற்றிய 90 ஆண்டுகால சிறப்பான சேவையை கொண்டாடும் விதமாக, புதுடெல்லியில் இன்று மராத்தான் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. சுமார் 3.5 கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்த மாரத்தான், ஆகாஷ்வாணி பவனில் தொடங்கி, கிருஷிபவன், ரயில் பவன் மற்றும் ரிசர்வ் வங்கி கட்டிடம் வழியாகச் சென்று, மீண்டும் ஆகாஷ்வாணி பவனில் நிறைவு பெற்றது. இது குறித்த கூடுதல் தகவல்…

**(வாய்ஸ்)**

(வாய்ஸ்)

ஆகாஷ்வாணி 1936ல் நிறுவப்பட்டது. இது நாட்டின் மிகவும் நம்பகமான ஒலிபரப்புத் தளங்களில் ஒன்றாக தொடர்ந்து விளங்குகிறது. டிஜிட்டல் உலகம் ஆதிக்கம் செலுத்தும் இந்த காலகட்டத்திலும், ஆகாஷ்வாணி மக்களின் வாழ்வில், ஒரு தனிச்சிறப்பான இடத்தை பிடித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அது  பழமையையும், தற்கால மாற்றங்களையும் ஒருங்கிணைக்கிறது. இது செய்திகள், இசை மற்றும் பொதுச் சேவை நிகழ்ச்சிகளை பல்வேறு மொழிகளில் ஒலிபரப்பி வருகிறது.

ஆகாஷ்வாணி தனது புகழ்பெற்ற வரலாற்றை கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல், பல்வேறு ஆரோக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளிலும் பங்காற்றி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று நடைபெற்ற மாரத்தான் போட்டி ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான இந்தியா என்ற அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க இந்த முன்னெடுப்பு எடுக்கப்பட்டுள்ளதாக, ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குநர் திரு. ராஜீவ் குமார் ஜெயின் தெரிவித்துள்ளார்.

(வாய்ஸ்)

ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன் மற்றும் பிரசார் பாரதி ஊழியர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் இன்று நடைபெற்ற மாரத்தானில் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் நிறைவு பதக்கம் வழங்கப்பட்டதுடன், ஆண் மற்றும் பெண் பிரிவுகளில் முதல் 3 இடங்களைப் பிடித்தவர்களுக்கு கோப்பைகள் வழங்கப்பட்டன. பிரசார் பாரதி தலைமை நிர்வாக அதிகாரி திரு. கௌரவ் துவேதி மற்றும் ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குநர் திரு. ராஜீவ் குமார் ஜெயின் ஆகியோர் இந்த மாரத்தான் ஓட்டத்தை கொடியசைத்து தொடக்கி வைத்தனர்.

90ஆவது ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, நாடு தழுவிய மாரத்தான் மற்றும் வாக்கத்தான் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று கூறிய திரு. கௌரவ் துவேதி, இந்த மாரத்தான் உடற்பயிற்சி இயக்கத்தின் முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் என்றார்.

மேலும், இந்த மாதம் முழுவதும் நாட்டிலுள்ள 232 ஆகாஷ்வாணி கேந்திரங்களிலும் தொடர் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று ஆகாஷ்வாணியின் தலைமை இயக்குநர் திரு. ராஜீவ் குமார் ஜெயின் தெரிவித்துள்ளார்.

***அமித் □ ா (20)***

மேற்கு வங்க மாநிலத்தில் பிஜேபியின் சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தலை மேற்பார்வையிட மத்திய உள்துறை அமைச்சரும், மத்திய பார்வையாளருமான திரு. அமித் ஷா, கொல்கத்தா சென்றுள்ளார். விமான நிலையம் சென்றடைந்த அவரை, மாநிலத் தலைவர் திரு. ஷமிக் பட்டாச்சாரியா, மத்திய இணையமைச்சர் திரு. சுகந்த மஜும்தர், மூத்த தலைவர்கள் திரு. சுவேந்து அதிகாரி, திரு. நிசித் பிரமாணிக், திரு. திலீப் கோஷ் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். விமானநிலையத்தில் இருந்து திரு. அமித் ஷா, தக்ஷினேஷ்வர் காளி

கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்த பின்னர், பிற்பகல் பிஸ்வா பங்ளா கன்வென்ஷன் சென்டரில், பிஜேபியின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுடன் அவர் கலந்துரையாட உள்ளார். அப்போது சட்டமன்ற கட்சித் தலைவர் முறையாக தேர்ந்தெடுக்கப்படுவார். திரு. அமித் ஷா நாளை காலை பிரிகேட் அணிவகுப்பு மைதானத்தில் நடைபெறும் கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவியேற்பு விழாவில், அவர் கலந்து கொள்ள உள்ளார். நிகழ்ச்சியில். பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிஜேபி ஆளும் மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள் மற்றும் மத்திய அமைச்சர்கள் கலந்துகொள்ள உள்ளனர். இதன் காரணமாக கொல்கத்தாவில் சுமார் 4 ஆயிரம் காவல்துறையினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

***ராம்மோகன் நாயுடு (17)***

உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் விமான போக்குவரத்து சந்தையான இந்தியா, நிதி உதவிக்கான முக்கிய உலகளாவிய இடமாக மாறி வருகிறது என்று மத்திய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கிஞ்சரபு ராம் மோகன் நாயுடு, தெரிவித்துள்ளார். காந்தி நகரில் உள்ள, கிஃப்ட் சிட்டியில் இன்று நடைபெற்ற விமான நிதி உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், உலகிற்கு இந்தியாவின் சாளரமாக குஜராத் செயல்படுகிறது என்றும், இந்தத் துறையின் அதிவேக வளர்ச்சி குறித்தும் எடுத்துரைத்தார்.

2026ஆம் ஆண்டில் மட்டும் உள்நாட்டுப் பயணிகள் போக்குவரத்து 191 மில்லியனை எட்டியதன் மூலம் உலகளவில் 3ஆவது பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து சந்தையாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று குறிப்பிட்டார். கடற்படை விரிவாக்கத்தில் மட்டுமல்ல, உலகளாவிய தொழில்துறையுடன் போட்டியிட்டு, வழிநடத்தும் சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதிலும் மத்திய அரசு கவனம் செலுத்துகிறது என்று அமைச்சர் கூறினார்.

வளர்ந்த இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கு அவசியமான நீண்டகால நிதி உள்கட்டமைப்பு சொத்தாக

விமானத்தை பார்க்க வேண்டும் என்று பங்குதாரர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

***மேற்கு ஆசியா -1 (16)***

நாடு முழுவதும் வீட்டு உபயோகத்திற்கான எல்பிஜி விநியோகம் சீராக இருப்பதாகவும், எந்தவொரு விநியோகஸ்தரிடமும் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. புதுடெல்லியில் நடைபெற்ற அமைச்சகங்களுக்கு இடையிலான கூட்டத்தில் உரையாற்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் திருமதி. சுஜாதா ஷர்மா, மேற்காசியாவில் மாறிவரும் சூழ்நிலைக்கு மத்தியில் வீட்டு உபயோக நுகர்வோர் எரிவாயு பற்றாக்குறையை எதிர்கொள்ளாமல் இருப்பதையும், விலைகள் நிலையாக இருப்பதையும் உறுதி செய்வதே மத்திய அரசின் நோக்கமாகும் என்று கூறினார்.

மார்ச் மாதம் முதல் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட PNG இணைப்புகளுக்கு எரிவாயு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும், 2 லட்சத்து 66 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய இணைப்புகளுக்கான உள்கட்டமைப்பு மேம்படுத்தப் பட்டுள்ளதாகவும் திருமதி. ஷர்மா கூறினார். நாடு முழுவதும் பெட்ரோல் அல்லது டீசலுக்கு பற்றாக்குறை இல்லை என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

மேலும் வளைகுடா நாடுகளுடன் மத்திய அரசு தனது நல்லுறவை தொடர்வதாக, வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

***மேற்கு ஆசியா - 2 (6)***

அதன் ஒரு பகுதியாக, வெளியுறவுச் செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி, நேற்று, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார் என்றும், அவர் தெரிவித்தார். முன்னதாக, மத்தியவெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல் ஆகியோரும் இது

தொடர்பாக, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு பயணம் மேற்கொண்டனர் என்றும் திரு. ஜெய்ஸ்வால் குறிப்பிட்டுள்ளார்.

***கம்பன் விழா -1 (9)***

புதுச்சேரி கம்பன் கழகத்தின் 59ஆம் ஆண்டு கம்பன் விழா கம்பன் கலையரங்கில் இன்று தொடங்கியது. துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் இந்த 3 நாள் கம்பன்விழாவை தொடக்கி வைத்தார். துணைநிலை ஆளுநர், எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். விழாவில் ஆண்டு மலர் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கம்பன் விழாவில் 2ஆவது முறையாக பங்கேற்பது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும், இலக்கிய பண்பாட்டு மரபில் ராமாயணத்திற்கு எப்போதும் ஒரு சிறப்பான இடம் உண்டு என்றும் கூறினார். இது குறித்து துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறுகையில்,

**(வாய்ஸ்-ஆளுநர்)**

***கம்பன் விழா – 2 (17)***

பின்னர் பேசிய உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. ராமசுப்ரமணியன், தொடர்ந்து 59 ஆண்டுகளாக, 3 நாள் நிகழ்ச்சியாக நடைபெறும் ஒரே கம்பன் விழா, புதுச்சேரி கம்பன் கழகம் நடத்தும் இந்த விழாதான் என்று பாராட்டினார். அடுத்த ஆண்டு, தன்னுடைய 60ஆவது ஆண்டை எட்டும்போது இந்த விழா, இன்னும் மிகப்பெரிய அளவில் கொண்டுச் செல்லப்பட வேண்டும் என்பதே தனது விருப்பம் என்று கூறினார்.

மொழி, கலாச்சாரம், இனம், நாடுகளைத் தாண்டி, கம்பன் ஏற்படுத்தியுள்ள தாக்கம், இந்த உலகத்தில் வேறு எந்த கவிஞனும் ஏற்படுத்தவில்லை என்றும் அவர் கூறினார். உண்மை, வாய்மை, மெய்மை ஆகியவற்றின் மேன்மையை கம்பன் அயோத்தியா காண்டத்தில், விளக்கியதைப் போல், எந்தக் கவிஞனும் காட்டியதில்லை என்று திரு. ராமசுப்ரமணியன் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில், உச்சீதிமன்ற முன்னாள் நீதி அரசரும், தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவருமான திரு. ராமசுப்ரமணியன், கம்பன் கழகத் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான திரு. செல்வகணபதி, கம்பன் கழகச் செயலாளர் திரு. சிவக்கொழுந்து, கம்பன் கழக நிர்வாகிகள் மற்றும் தமிழ் அறிஞர்கள் விழாவில் பங்கேற்றனர்.

***புதுச்சேரி உலகப்போர் (10)***

இரண்டாம் உலகப் போர் நிறைவு பெற்றதன் 81ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி, கடற்கரைச் சாலையில் உள்ள போர் வீரர் நினைவுத் தூணில் புதுச்சேரி அரசு சார்பில், உலகப் போரின்போது உயிர்நீத்த போர் வீரர்களின் நினைவாக மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், புதுச்சேரிக்கான பிரான்ஸ் நாட்டு துணைத் தூதர், திரு. எட்டியன் ரோலண்ட் பியக் ஆகியோர் உயிர்நீத்த வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். அப்போது இந்தியா மற்றும் பிரான்ஸ் நாட்டின் தேசிய கொடிகள் ஏற்றப்பட்டு, இரு நாட்டின் தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

***புதுச்சேரி – சிறுமி (17)***

புதுச்சேரியை உலுக்கிய சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதித்து, புதுச்சேரி போக்ஸோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. புதுச்சேரி முத்தியால் பேட்டையில் கடந்த 2024ஆம் ஆண்டு, வீட்டின் அருகே விளையாடி கொண்டிருந்த சிறுமியை கடத்தி, பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் கருணாஸ் என்ற இளைஞர் மற்றும் விவேகானந்தன் என்ற முதியவர் என 2 பேர் கைது செய்யப்பட்டு, காலாப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலையில், விவேகானந்தன் சிறையில் தற்கொலை செய்து கொண்டார். தொடர்ந்து இந்த வழக்கு போக்ஸோ நீதிமன்றத்தில் சுமார் 2 ஆண்டு காலம் நடைபெற்று வந்த நிலையில், வழக்கின் விசாரணைகள் முடிவடைந்து, இன்று தீர்ப்பு வெளியாகி உள்ளது. இதன்படி, இன்று நீதிபதி சுமதி தீர்ப்பு வழங்க வந்த நிலையில், குற்றவாளியான கருணாஸிடம் இறுதி விசாரணை நடத்தினார். விசாரணையின் முடிவில் கருணாஸ் குற்றவாளி என நீதிபதி சுமதி உறுதிப்படுத்தி, குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவிட்டார்.

***ப்ளஸ் 2 முடிவுகள் (17)***

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று வெளியான ப்ளஸ் 2 தேர்வு முடிவுகளில் மாணவிகள் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் 2ஆம் தேதி முதல் 26ஆம் தேதி வரை நடைபெற்ற ப்ளஸ் 2 தேர்வில், தமிழகத்தில், தேர்ச்சி சதவிகிதம் 95.2 என்றும், மாணவர்களை விட மாணவிகளின் தேர்ச்சி விகிதம் 3.81சதவிகிதம் அதிகம் என்றும், பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது. இவ்வாண்டு தேர்வெழுதிய 250 சிறைவாசிகளில் 238 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

புதுச்சேரியில் மேல்நிலைப் பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியர்களுக்கு துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். தேர்வு முடிவுகளின் அடிப்படையில், புதுச்சேரியில் 98.65 சதவிகிதம் மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் 97.67 சதவிகித அளவில் தேர்ச்சி பெற்றிருப்பது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்த முறை தேர்வில் வெற்றி பெறாத மாணவர்கள் மனம் தளராமல் முயற்சி செய்து வரும் தேர்வுகளில் வெற்றி பெற வாழ்த்துவதாக திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

காரைக்கால் மாவட்டத்தில், மாணவர்கள் 96.46 சதவிகிதமும், மாணவிகள் 98.56 சதவிகிதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். வழக்கம்போல் மாணவிகளே அதிக அளவு தேர்ச்சி பெற்றுள்ளனர்.

***கிரிக்கெட் (3)***

ஐபிஎல் டி20 கிரிக்கெட் போட்டியில், டெல்லி, அருண் ஜெட்லி மைதானத்தில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில், டெல்லி, கொல்கத்தா அணிகள் களம் காணுகின்றன.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

இந்தியாவின் நாகரீக வலிமை, ஒற்றுமை மற்றும் நெகிழ்ச்சியின் அடையாளமாக சோம்நாத் கோவில் திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஆகாஷ்வாணியின் 90 ஆண்டுகால சிறப்பான சேவையை கொண்டாடும் விதமாக, புதுடெல்லியில் இன்று மராத்தான் ஓட்டம் நடைபெற்றது.

புதுச்சேரி கம்பன் கழகத்தின் 59ஆம் ஆண்டு கம்பன் விழா கம்பன் கலையரங்கில் இன்று தொடங்கியது.

புதுச்சேரியில் இரண்டாம் உலகப் போர் நிறைவு பெற்றதன் 81ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்பட்டது.